# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

## சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி “கல்வி”

### கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



சேர நாடு வேழமுடைத்து, சோழ நாடு சோறுடைத்து, பாண்டிய நாடு முத்துடைத்து, தொண்டை நாடு சான்றோருடைத்து என்று கூறுவார்கள். தொண்டை நாடு என்று அழைக்கப்பட்ட மாவட்டம் நம்முடைய ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம். பல வரலாற்று நிகழ்வுகளில் இந்தியாவிற்கு முன்மாதிரி மாவட்டமாகத் திகழ்ந்த நமது வேலூர் மாவட்டம், உயர்கல்வியிலும் முன்மாதிரி மாவட்டமாகத் திகழ வேண்டும் என்பதே எனது நோக்கம். தனிநபர் வருமானத்தில் நாம் உயர வேண்டுமென்றால் அதற்கு ஒரே கருவி உயர்கல்வி மட்டுமே. GER - Gross Enrolment Ratio - Access to Higher Education அறிக்கையின்படி இந்தியாவில் தமிழ்நாடு 47 சதவிகிதம் பெற்று முதலிடத்தில் உள்ளது. உயர்கல்வியில் அமெரிக்காவுக்கு நிகராக 88 சதவிகிதம் முன்னேற வேண்டும் என்பதே எனது எண்ணம். அவ்வெண்ணத்தின் செயல்பாடே அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை 2012 ஆம் ஆண்டு முதல் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சவ்வாது மலை, ஏழை, எளிய மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்குகின்றது. வரும் கல்வி ஆண்டுமுதல் இத்திட்டத்தினைத் திருவண்ணாமலை மாவட்டத்திற்கும் அறக்கட்டளை விரிவுபடுத்துகிறது. இதற்காக விஐடி பல்கலைக்கழகத்தில் வேலூர், சென்னை, அமராவதி (ஆந்திரப் பிரதேசம்) மற்றும் போபால் (மத்தியப்பிரதேசம்) வளாகங்களில் பணிபுரியும் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் தங்களது ஒரு நாள் ஊதியத்தை எனது பிறந்தநாள் அன்று நன்கொடையாக அளிக்கின்றனர். அந்நன்கொடையை அப்படியே அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்குக் கொடுத்து உயர்கல்வி பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவி செய்யப்படுகின்றது. இது போன்று அனைத்து அரசு ஊழியர்களும் அவர்களது ஒரு நாள் ஊதியத்தைக் கொடுக்க முன்வந்தால், இந்தியாவிலுள்ள பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள் அனைவரையும் உயர்கல்வியில் சேர்த்துப் படிக்க வைத்துவிட்டோம் என்றால் அவர்களுடைய குடும்பம் மற்றும் நாட்டின் பொருளாதாரமும் ஒருசேர உயரும். இவ்வறக்கட்டளையானது இதுவரை 9,400 மாணவர்களுக்கு ரூபாய் 10.65 கோடி உயர்கல்விக்கு உதவித்தொகையாகக் கொடுத்து இருக்கின்றது.


### பேராசிரியர் முனைவர். இரத்தின நடராஜன், அறக்கட்டளை உறுப்பினர்



“வேந்தர் ஓர் அற்புதப் பிறவி” “சிலர் புகழோடு பிறக்கிறார்கள்; சிலரின் மீது புகழ் திணிக்கப்படுகிறது. ஆனால், சிலர் தங்கள் உழைப்பால் புகழ்பெறுகிறார்கள் என்கிறார் உலக மகா கவிஞர் ஷேக்ஸ்பியர். அது நமது கல்விக்கோ முனைவர். வேந்தர் அவர்களுக்குச் சாலவும் பொருந்தும். அவர் எதையும் தொடாமல் விட்டதில்லை, தொட்டதில் துலங்காமல் போனதில்லை. எளிய குடும்பத்தில் பிறந்து தனது முயற்சி, கடும் உழைப்பால் உச்சியைத் தொட்டவர். வேந்தர் பன்முகத்தன்மை கொண்ட அதிசய மனிதர், அவர் ஒரு சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், நிர்வாகி, கல்வியாளர், மொழியின் ஏற்றத்திற்காகப் பாடுபடுபவர், ஏழைகளின் பங்காளர்.

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையினை ஆரம்பித்து ஏழை எளிய மாணவர்களுக்குப் பாகுபாடின்றிப் பல நிலைகளில் உதவித்தொகை அளித்து அவர்களின் மேம்பாட்டிற்கு உதவி செய்கிறார். அதற்கென ஒரு துறையை உருவாக்கி விண்ணப்பங்களை வழங்கி நேர்காணல் செய்து உரியவர்களைத் தேர்ந்தெடுத்து உதவித்தொகை வழங்கி வருகிறார். அதில் முதல்தலைமுறையைச் சேர்ந்தவர்கள் வாயார வாழ்த்துகின்றனர். இத்தகைய அற்புதமான, அதிசயத்தக்கத் திட்டத்தினை ஆற்றிவரும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையையும், அதன் உறுப்பினர்களையும் அத்துறையில் பணியாற்றுபவர்களையும், அனைத்திற்கும் மேலாக இவற்றிற்கெல்லாம் மூல காரணமாக இருந்து வழி நடத்துகின்ற வேந்தர் அவர்களையும் அனைவர் சார்பிலும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## திரு. ருக்ஜி கே. இராஜேஷ் குமார், அறக்கட்டளை உறுப்பினர்



நாட்டு முன்னேற்றத்தின் சக்தி வாய்ந்த ஒரே ஆயுதம் கல்வி. அக்கல்விச் செல்வத்தை இன்றைய மாணவ சமுதாயம் பயனடையுமாறு செய்வது தவம். அச்செயலைச் சிறப்பாக செயல்படுத்துவதற்கு முன்மாதிரியாகக் கல்வியில் புரட்சி ஏற்படுத்தும் வகையில் வடஆற்காடு மாவட்டத்தில் அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை செயல்படுவதை மாபெரும் மகிழ்ச்சியாகக் காண்கிறார் வேந்தர் அவர்கள். இந்த அறக்கட்டளை கிராமப்புற மக்களுக்கும், முதல்தலைமுறை பட்டப்படிப்பு கற்க ஏங்குபவர்களுக்கும் வரமாகத் திகழ்கிறது.

“உயர்கல்வி தனிமனிதரின் வாழ்க்கை தரத்தையும் சமூகத்தின் முன்னேற்றத்தையும் மேம்படுத்தும் மைல் கல்”. இளம் தலைமுறை தங்களின் திறமைகளை மேம்படுத்த மற்றும் சமூகத்தில் நிலையான மாற்றத்தை உருவாக்க தங்களின் இலக்குகளைத் தாங்கள் விரும்பியபடி நாடிச் செல்வதற்கும் உயர்கல்வி அவசியம். கல்வியைப் பெறுவது ஒவ்வொருவரின் பிறப்புரிமை. கற்றக் கல்விக்கேற்ப உழைப்பதால் வேலையில் முன்னுரிமையும், தொழிற்துறையில் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் திறனையும், நற்பேற்றையும், சமூகத்தின் மீது உண்மையான அக்கறையோடு கடமையாற்றும் பண்பையும் வளர்க்கும்.

“அறிவு எப்போதும் அறியாமையை ஆளும்” மனிதனின் ஒளிமயமான வாழ்க்கைக்கு வித்தாய் அமைவது கல்வி என்பதை உணர்த்தும் வண்ணம், அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவியால் பயிலும் மாணவர்கள் அறிவியல் நெறிமுறைகள் மற்றும் சமூகப் பங்களிப்பில் சிறந்தவர்களாக வளர்ந்து, உலகெங்கிலும் உள்ள சவால்களுக்குத் தீர்வு காணும் ஆளுமை உடையவர்களாகத் திகழ்வதற்கு, நாங்கள் துணை நிற்போம். “கல்வியில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிப்பதே எங்கள் நோக்கம்”..

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு



2024 - 25 ஆம் கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான நேர்காணல் 2024 ஜூலை 12 முதல் அக்டோபர் 25 வரை நடைபெற்றது. இதில் வேலூர், காட்பாடி, கீ.வ. குப்பம், குடியாத்தம், பேர்ணாம்பட்டு, அணைக்கட்டு, கணியம்பாடி, மாதனூர், ஆலங்காயம், ஜோலார்ப்பேட்டை, திருப்பத்தூர், கந்திலி, நாட்றம்பள்ளி, ஆற்காடு, திமிரி, வாலாஜா, காவேரிப்பாக்கம், சோளிங்கர், நெமிலி, அரக்கோணம் மற்றும் சவ்வாது மலை ஒன்றியத்திற்குட்பட்ட 1,462 மாணவ, மாணவியர்தம் பெற்றோர்களுடன் கலந்துகொண்டனர். நேர்காணலின் மூலம் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பெற்றோர் மற்றும் மாணவர்களிடம் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை அறிய, அறக்கட்டளைப் பணியாளர்கள் உதவித்தொகை விண்ணப்பித்த மாணவர்களின் இருப்பிடத்திற்குச் சென்று களப்பணி செய்து வருகின்றனர்.

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை கல்வி உதவித்தொகை வழங்குதல்









2024 - 25 கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி 2024 நவம்பர் 25 அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு கு.பிச்சாண்டி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார்.



தினத்தந்தி வேலூர் 26-11-2024 9

720 மாணவர்களுக்கு ரூ.62 லட்சம் கல்வி உதவித்தொகை

துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி வழங்கினார்



THE NEW INDIAN EXPRESS

SCHOLARSHIP FOR 720

Vellore's GER should equal US', says VIT Chancellor

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர், அறங்காவலர்கள் மற்றும் நிதிக்குழுத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் 720 மாணவ மாணவியர்க்கு ரூபாய். 62.61 லட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.





## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை திருவண்ணாமலை மாவட்டத்திற்கு விரிவாக்கம் கலந்துரையாடல்









2024 நவம்பர் 25 வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் அனைத்துச் சங்கங்களுடன் இணைந்து, அனைவர்க்கும் உயர்கல்வித் திட்டம் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு விரிவாக்கத்தைக் குறித்துக் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்நிகழ்வில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராகத் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு கு.பிச்சாண்டி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர், அறங்காவலர்கள் மற்றும் மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அனைத்துச் சங்கங்களின் தலைவர்கள், செயலர்கள், பொருளாளர்கள், கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

**TITLE : "Life Skills for Career and Personal Success"**
**Resource Persons : Prof. Dr. S. Jose, SMEC, VIT University, Vellore**
**Prof. Dr. Vincent Herald Wilson, SMEC, VIT University, Vellore**
**Participants : UG & PG Final Year - 200 Students**










அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை மற்றும் குடியாத்தம் பகுதியில் உள்ள கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து நடத்திய "Life Skills for Career and Personal Success" வாழ்வியல் திறன் மேம்பாட்டு மற்றும் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி அக்கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்குத் தொழில் மற்றும் தொழில் சார்ந்த திறமையை வளர்த்துக்கொள்வது குறித்தும், வாழ்வியல் திறன்களை மேம்படுத்துவது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. முனைவர். எஸ். ஜோஸ், பேராசிரியர், விஐடி பல்கலைக்கழகம் மற்றும் முனைவர். வின்சென்ட் ஹெரால்ட் வில்சன், பேராசிரியர், விஐடி பல்கலைக்கழகம் அவர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு பயிற்சி-யளித்தனர். இந்நிகழ்வில் கல்லூரிச் செயலர் மற்றும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உறுப்பினர் கே.எம்.ஜி. இராஜேந்திரன், கல்லூரி முதல்வர். முனைவர். சி.தண்டபாணி அவர்கள் பேராசிரியர்கள், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித் திட்ட இயக்குநர் திரு. ப. சுந்தர் ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.


ஆளுமைத் திறன் மேம்பாட்டு திட்டப் பயிற்சி

## SHINE பகுதி XIII நிறைவு விழா SHINE பகுதி XIV தொடக்க விழா









அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை வேலூர், Pearltri Foundation சென்னை மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் சென்னை இணைந்து நடத்திய தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி SHINE XIII பகுதி நிறைவு மற்றும் SHINE XIV பகுதி தொடக்க விழா விஐடி வளாகத்தில் 2024 ஜூலை 05 அன்று நடைபெற்றது. இணை துணை வேந்தர், முனைவர். பார்த்த சாரதி மல்லிக், விஐடி பல்கலைக்கழகம், வேலூர் அவர்கள் தலைமையேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், மூத்த மேலாளர், திருமதி. ஜெயா எத்திராஜ், ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், Sr. HR Partner திருமதி. ஸ்னிக்தா அகர்வால், Pearltri Foundation பயிற்றுநர் திரு. ஓ. பரத், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, உதவித் திட்ட இயக்குநர் திரு. ப. சுந்தர் ராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பயிற்சி பெற்ற மற்றும் பெறப்போகும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## SHINE பகுதி XIV நிறைவு விழா SHINE பகுதி XV தொடக்க விழா





அனைவர்க்கும் உயர்கல்வி அறக்-கட்டளை வேலூர், Pearltri Foundation சென்னை மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் சென்னை, இணைந்து நடத்திய தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி SHINE XIV பகுதி நிறைவு





மற்றும் SHINE XV பகுதி தொடக்க விழா விஜடி வளாகத்தில் 2024 அக்டோபர் 04 அன்று நடைபெற்றது. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உறுப்பினர், BMD Jain School செயலாளர் மற்றும் ருக்ஜி நகைக் கடை உரிமையாளர் திரு. ருக்ஜி. கே. இராஜேஷ் குமார் அவர்கள் தலைமையேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், CSR பொது மேலாளர் திரு. எஸ்.சாத்தப்பன், ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், மூத்த மேலாளர் திருமதி. ஜெயா எத்திராஜ் மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், Sr. HR Partner திருமதி. ஸ்னிக்தா அகர்வால், Pearltri Foundation பயிற்றுநர் திரு. ஓ. பரத் மற்றும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, உதவி திட்ட இயக்குநர் திரு. ப. சுந்தர் ராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பயிற்சிப் பெற்ற மற்றும் பெறப்போகும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## SHINE முன்னாள் மாணவர்கள் சந்திப்புக் கூட்டம்










ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் சென்னை, Pearltri Foundation மற்றும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை வேலூர், இணைந்து நடத்திய SHINE முன்னாள் மாணவர்கள் சந்திப்புக் கூட்டம் விஜடி வளாகம் டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர் அரங்கத்தில் 2024 டிசம்பர் 08, அன்று நடைபெற்றது. SHINE பகுதி II முதல் SHINE பகுதி XIV வரை முன்னாள் மாணவர்கள் கலந்துகொண்டு அவர்களின் அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்து கொண்டனர் இந்நிகழ்வில் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் இயக்குநர் திரு. சுப்புரத்தினம், ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், CSR பொது மேலாளர் திரு. எஸ். சாத்தப்பன், ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் மூத்த மேலாளர் திருமதி. ஜெயா எத்திராஜ், ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், Sr. HR Partner திருமதி. ஸ்னிக்தா அகர்வால், ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் மூத்த நிர்வாகி, திரு. நவீன் சுப்பிரமணியம் மற்றும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, உதவித் திட்ட இயக்குநர் திரு. ப. சுந்தர் ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார், மாணவர்களுக்குச் சிறப்புப் பரிசுகளை வழங்கி நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

### கீதாலட்சுமி. கி



திருவண்ணாமலை மாவட்டம், சவ்வாது மலையில் உள்ள வீரப்பனூர் கிராமத்தில் வசிக்கிறேன். அப்பா விவசாய வேலை செய்கிறார். சவ்வாது மலை அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பில் 80 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். உயர்கல்வி பயில ஸ்ரீநிவாசன் செவிலியர் கல்லூரியில் பி.எஸ்.சி. செவிலியர் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருவதாக அரசு பள்ளியில் நடந்த விழிப்புணர்வு மூலம் அறிந்து அறக்கட்டளையில் உதவித் தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது அப்போலோ மருத்துவமனையில் Staff Nurse ஆகப் பணிபுரிகிறேன் என் உயர்கல்விக்கும் என் போன்று பல மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு என் சார்பிலும் என் போன்ற மாணவர்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### முஜாஹித் யஸ்த்தனி



நான் திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடிப் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா தனியார் நிறுவனத்தில் பணியாளராக வேலை செய்கிறார். இஸ்லாமியா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பில் 81.5 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கி வருவதை எனது பள்ளியின் ஆசிரியரின் மூலம் அறிந்து, அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் இஸ்லாமியாக் கல்லூரியில் சேர்ந்த எனக்கு அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது துபாயில் உள்ள தனியார் நிறுவனத்தில் கணினி வரைபட வடிவமைப்பாளராகப் பணிபுரிகிறேன். என் போன்று உயர்கல்வி பயில்வதற்கு வசதியில்லாத மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்க ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பிரியதர்ஷினி. வி



என்னுடைய சிறு வயதிலேயே அப்பா இறந்துவிட்டார். அம்மா தினக் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா தாலுக்கா, இலாலாபேட்டைப் பகுதியில் வசிக்கிறேன். ஸ்ரீ இராமகிருஷ்ணா பெல் மேல்நிலை பள்ளியில் 12ஆம் வகுப்பில் 68 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கி வருவதை எனது பள்ளியின் ஆசிரியரின் மூலம் அறிந்து, அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். நான் தர்மபுரி அன்னை செவிலியர் கல்லூரியில் பி.எஸ்.சி. செவிலியர் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருவதாக அரசு அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது சௌதி கேர் மெடிக்கல் மருத்துவமனையில் Staff Nurse ஆகப் பணிபுரிகிறேன் என் உயர்கல்விக்கும் என் போன்று பல மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு என் சார்பிலும் என் போன்ற மாணவர்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பவித்ரன். த



திருவள்ளுவர் மாவட்டம், திருத்தணி தாலுக்கா, சந்தான கோபாலபுரம் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா தையல் வேலை செய்கிறார். அரக்கோணம் செயின்ட் ஆன்ட்ரிஸ் மேல்நிலைப்பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 90.5 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். உயர்கல்வி பயில சவீதா பொறியியல் கல்லூரியில் பி.இ. சிஎஸ்இ படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது நான் விப்ரோ பிரைவேட் கம்பெனியில் சாப்ட்வேர் இன்ஜினியராகப் பணிபுரிகின்றேன். என் உயர்கல்விக்கு, என் இலக்குகளை அடைவதில் உறுதுணையாக இருந்த அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன். மேலும் என் போன்ற மாணவர்களின் உயர்கல்விக்கு அறக்கட்டளையைப் பரிந்துரைச் செய்கிறேன்.


### இரக்க்ஷனா. கு




வேலூர் மாவட்டம், குடியாத்தம், கோபாலபுரம் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா வீட்டிற்கு வண்ணம் தீட்டும் வேலை செய்கிறார். நான் நேஷனல் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 60 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். உயர்கல்விப் பயில கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.எஸ்.சி. கணிதம் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையின் நேர்முகத்தேர்விலும், அறக்கட்டளையின் பணியாளர்கள் வீட்டிற்கு வருகைத்தந்து நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்விப் பயில உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது சிக்க்ஷா கிரீன் உட்ஸ் மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிகின்றேன். என் உயர்கல்விக்கும், என் போன்ற மாணவ, மாணவியர்களின் உயர்கல்விக்கும் உதவி செய்து கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# கல்வி உதவித்தொகை பெற்றவர்: 2012 - 2025: 9,400


## Gender




## First Generation Graduates





## Course




- Arts & Science (6,282)
- Engineering / Polytechnic (1,454)
- Medicine (33)
- Nursing (854)
- Paramedical / Allied Health Science (504)
- Teacher Training / Hotel Management (58)
- Others (215) *

TOTAL 9,400

## School wise Beneficiaries Details




- Govt. School (5,081)
- Govt. Aided Schools (3,359)
- Matric. Schools (960)

TOTAL 9,400

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்குதல்







விஐடி பல்கலைக்கழகத்தின் நிறுவுநர் மற்றும் வேந்தர் கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்களுக்கு நியூயார்க் பிங்ஹாம்டன் பல்கலைக் கழகத்தில் மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றமைக்கு இராணிப்பேட்டை மாவட்ட அனைத்துச் சங்கங்களும் இணைந்து நடத்திய பாராட்டு விழாவில் Rs. 25 இலட்சம் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கினார்கள்.

அறக்கட்டளைத் தலைவர், விஐடி பல்கலைக் கழகத்தின் நிறுவுநர் மற்றும் வேந்தர் கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்களின் 86 ஆவது பிறந்தநாள் விழாவில் வேலூர், சென்னை, அமராவதி (ஆந்திரப் பிரதேசம்) மற்றும் போபால் (மத்தியப்பிரதேசம்) வளாகத்தின் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஒரு நாள் ஊதியத்தை அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கினார்கள்.








### அறக்கட்டளை உறுப்பினர்கள்



அறக்கட்டளையின் இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்குப் பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி

உதவித் திட்ட இயக்குநர்
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர் பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0416 - 220 2196, 8428408872

### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
A/c. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore - 632 014.
IFS Code : IDIB000V086

**DONATE**

**இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!**
**மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!**